# டெல்லி காற்று மாசு | பயிர்க் கழிவுகள் எரிப்பதை உடனே நிறுத்த 4 மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



**புதுடெல்லி:** டெல்லியில் காற்று மாசு தொடர்ந்து அபாயகரமான குறியீட்டிலேயே இருக்கும் சூழலில் பஞ்சாப், ஹரியாணா, உத்தரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களும் உடனடியாக பயிர்க் கழிவு எரிப்பதை நிறுத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லியில் காற்றின் தரக் குறியீடு (Air Quality Index) அண்மைக் காலமாக 400-க்கும் மேல் உள்ளது. இது மிகவும் அபாயகரமானது சாதாரண சுவாசப் பாதை கோளாறு உள்பட ஆஸ்துமா தொடங்கி

நுரையீரல் புற்றுநோய் வரை ஏற்படுத்துக் கூடிய அளவுக்கு காற்றின் தரம் அங்கு மோசமாக உள்ளது. இதனால், டெல்லியில் தொடக்கப் பள்ளிகளுக்கு வரும் 10-ஆம் தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு, தனியார் ஊழியர்கள் பலருக்கும் வீட்டிலிருந்து பணிபுரியும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. வாகனங்களை பதிவு எண் அடிப்படையில் ஒற்றை, இரட்டை இலக்க எண்கள் கொண்டு பயணத்துக்கு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், டெல்லி காற்று மாசு தொடர்பான வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் இன்று (நவ.7) விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவும், சுதான்சு துலியா அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்தது.

அப்போது, பஞ்சாப் மாநிலத்தின் அட்டர்னி ஜெனரல் ஆஜராகி, "பஞ்சாப்பில் பயிர்க் கழிவு எரிப்பது என்பது வெறும் 20 முதல் 50 நாட்கள் மட்டுமே நடக்கும் நிகழ்வு. அதனால் மட்டுமே டெல்லியில் காற்று மாசுபாடு ஏற்படவில்லை" என்றார். அதற்கு நீதிபதி கவுல் கூறுகையில், "எத்தனை நாட்கள் நடைபெறுகிறது என்பதல்ல, எந்தக் காலக்கட்டத்தில் அது நடக்கிறது என்பதுதான் இங்கே பிரச்சினை. நீங்கள் பயிர்க் கழிவு எரிக்கப்படுவதை எப்படித் தடுப்பீர்கள் என்று எங்களுக்குத் தெரியாது. நீங்கள் கட்டாயப்படுத்தி நிறுத்துவீர்களோ அல்லது ஊக்கத் தொகை கொடுத்து நிறுத்துவீர்களோ அது தெரியாது. ஆனால், பயிர்க் கழிவு எரிப்பதை உங்கள் மாநிலத்தில் உடனடியாக நிறுத்துங்கள். ஒவ்வொரு முறையும் காற்று மாசு பிரச்சினையில் அரசியல் போட்டாபோட்டியை அனுமதிக்க முடியாது. ஒவ்வோர் ஆண்டும் டெல்லியில் இதே நிலை தொடரவும் விட முடியாது" என்றார்.

பஞ்சாப் மட்டுமல்லாது உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியாணா மாநிலங்களும் பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது. தொடர்ந்து, "பயிர்க் கழிவு எரிக்கப்படுவதுதான் காற்று மாசுபாட்டுக்கு மிகப் பெரிய காரணமாக இருக்கிறது. டெல்லியில் ஒவ்வோர் ஆண்டும் இதே நிலை தொடர அனுமதிக்க முடியாது. டெல்லி அரசானது நகராட்சி சேகரிக்கும் திடக் கழிவுகளை பொது வெளியில் எரிக்காத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நீதிமன்றம் கூறியது.

**தீர்வு காணுங்கள்:** நாளை (நவம்பர் 8) இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை நேரிலோ அல்லது ஆன்லைன் வாயிலாகவோ நடத்த உத்தரவிட்டது. வெள்ளிக்கிழமைக்குள் காற்று மாசு பிரச்சினை தொடர்பாக ஒரு தெளிவானப் புரிதலோடு ஏதேனும் தீர்வும் எட்டப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது. அத்துடன், இந்த வழக்கு விசாரணை வரும் 10-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**டெல்லி அரசுக்குக் கண்டனம்:** இந்த வழக்கு விசாரணையில் உச்ச நீதிமன்றத்துக்கு உதவியாக அமர்த்தப்பட்டுள்ள வழக்கறிஞர் அபராஜிதா சிங், டெல்லியில் அமைக்கப்பட்டுள்ள புகை கண்காணிப்பு கோபுரம் (ஸ்மாக் டவர்) பழுதாகி உள்ளது என்றார். அதற்கு நீதிமன்றம் டெல்லி அரசை கடுமையாக சாடியது குறிப்பிடத்தக்கது.

## பட்டாசுக்கு கட்டுப்பாடு | சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி தீபாவளி கொண்டாட உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்



**புதுடெல்லி:** சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் தீபாவளி கொண்டாட்டம் இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தீபாவளியை கொண்டாடும் நோக்கில் பட்டாசு வெடிப்பதற்கு உச்ச நீதிமன்றம் கட்டுப்பாடு விதித்துள்ள நிலையில், அதை மீறும் வகையில் ராஜஸ்தானில் பட்டாசு வெடிக்கப்படுவதாகவும், இதனால், சுற்றுச்சூழல் பாதிப்பு மோசடைவதாகவும் கூறி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, எம்.எம்.சுந்தரேஷ் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது "கொண்டாட்டங்கள் இருக்க வேண்டும்; அதேநேரத்தில் அது மிதமானதாகவும் இருக்க வேண்டும். கொண்டாட்டங்கள் மூலம் ஒருவர் மற்றவர்களிடத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம், ஆனால், அது சுற்றுச்சூழலுக்கு

பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது" என நீதிபதி எம்எம் சுந்தரேஷ் தெரிவித்தார்.

"பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதால், சிறுவர்கள் அதிகமாக பட்டாசுகளை வெடிப்பதில்லை. ஆனால், வயது வந்தவர்கள்தான் அதிக அளவில் பட்டாசுகளை வெடிக்கிறார்கள். இரவு 10.30 மணி வரை பட்டாசுகளை வெடிக்கலாம் என அனுமதி அளித்தால், இரவு 10 மணி வரை பட்டாசுகளை வெடித்து முழுமையாக காலி செய்துவிட வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் இருக்கிறது" என நீதிபதி போபண்ணா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "சமூகத்தில் உள்ள அனைவருக்கும் பொறுப்புணர்வு இருக்க வேண்டும். அதன்மூலம் தான் இதுபோன்ற விஷயங்களில் தீர்வு காண முடியும். குறைவாக பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என அனைவரும் நினைக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

மனுதாரரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "சுற்றுச்சூழல் விஷயத்தில் அரசு தனக்கு இருக்கும் பொறுப்புணர்வை தவிர்த்து விட முடியாது. சுற்றுச்சூழலுக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்றம், "தீபாவளியை முன்னிட்டு காற்று மற்றும் ஒலி மாசு அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். திருவிழாக் காலங்களில் மட்டுமல்ல; மற்ற நேரங்களிலும்கூட அரசு இதனை கருத்தில் கொள்ள வேண்டும். இது ராஜஸ்தானுக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்" என்று உத்தரவிட்டது.

## தலைமை தகவல் ஆணையராக: ஹீராலால் சமாரியா பதவியேற்பு


ஹீராலால் சமாரியா

**புதுடெல்லி:** நாட்டின் தலைமை தகவல் ஆணையராக பதவி வகித்த யஷ்வர்தன் குமார் சின்ஹா, கடந்த அக்டோபர் மாதம் ஓய்வுபெற்றார். இதையடுத்து தகவல் ஆணையராக பணியாற்றி வந்த ஹீராலால் சமாரியா, புதிய தலைமை தகவல் ஆணையராக நேற்று பதவியேற்றுக் கொண்டார். குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.


2005-ம் ஆண்டு தொடங்கப்பட்ட மத்திய தகவல் ஆணையத்தின் தலைமைப் பொறுப்புக்கு வந்துள்ள முதல் தலித் சமூகத்தவர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

1985-ம் ஆண்டு பேட்ச், தெலங்கானா கேடர் அதிகாரியான சமாரியா, கடந்த 2020-ம் ஆண்டு நவம்பர் 7-ம் தேதி தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டார். மத்திய தகவல் ஆணையத்தில் தற்போது 2 தகவல் ஆணையர்கள் மட்டுமே உள்ளனர். 8 தகவல் ஆணையர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன.

பதவியேற்கும் நாளில் இருந்து 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்கள் பதவி வகிப்பார்கள்.

பிரதமர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் பிரதமரால் நியமிக்கப்படும் மத்திய அமைச்சர் உள்ளிட்டோரின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய தகவல் ஆணையரை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

## நேபாளத்தில் மீண்டும் நிலநடுக்கம் - டெல்லியிலும் உணரப்பட்ட பலத்த நில அதிர்வு



**காத்மாண்டு:** நேபாளத்தில் இன்று பிற்பகல் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக, டெல்லியிலும் அதன் பலத்த அதிர்வுகள் உணரப்பட்டதாக பொதுமக்கள் அச்சம் தெரிவித்தனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 1 நிமிடத்துக்கு மேல் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிகிறது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது. நேபாள நாட்டில் நள்ளிரவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டிட இடிபாடுகளில் சிக்கி 150-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், நேபாளத்தில் மீண்டும் இன்று பிற்பகல் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 5.6 ஆக பதிவானது. இதன் எதிரொலியாக டெல்லி உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களில் இன்றும் சக்திவாய்ந்த அதிர்வு உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.6 ஆகப் பதிவாகி இருந்தது. கடந்த 3 நாட்களில் இது 2-வது முறை எனக் கூறப்படுகிறது. டெல்லி, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களிலும் இந்த அதிர்வு கடுமையாக உணரப்பட்டது. இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். தலைநகர் டெல்லியில் காற்று மாசு அளவு தொடர்ந்து 5-வது நாளாக மிகவும் மோசமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது

## அடுத்த ஆண்டு பிப்ரவரியில் ராணுவத்தில் இணையும் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள்



**புதுடெல்லி:** அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இந்திய ராணுவத்தில் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட உள்ளன.

அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான போயிங்கின் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள், அமெரிக்க ராணுவத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவின் நட்பு நாடுகளான பிரிட்டன், இஸ்ரேல் உட்பட 18 நாடுகளின் ராணுவத்தில் இந்த வகை ஹெலிகாப்டர்கள் பயன்பாட்டில் உள்ளன.

அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் மணிக்கு 289 கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடியது. மோசமான வானிலையிலும் ஹெலிகாப்டரை இயக்க முடியும். அதிகபட்சமாக 2,800 அடி உயரம் வரை பறக்கும். ஒரு நிமிடத்தில் 128 இலக்குகளை குறிவைத்து தாக்கும் திறன் கொண்டது. இதன்மூலம் எதிரிகளின் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், ட்ரோன்களையும் தரை இலக்குகளையும் துல்லியமாக தாக்கி அழிக்க முடியும்.

கடந்த 2015-ம் ஆண்டில் இந்திய விமானப் படைக்காக 22 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவை தற்போது விமானப்படையில் சேவையாற்றி வருகின்றன.

இதைத் தொடர்ந்து இந்திய ராணுவத்துக்காக ரூ.5,691 கோடியில் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களை வாங்க கடந்த 2020-ம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அமெரிக்காவின் அரிசோனா மாகாணம், மெசா பகுதியில் உள்ள போயிங் ஆலையில், இந்திய ராணுவத்துக்காக அப்பாச்சி ஹெலிகாப்டர்களை தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் மாதத்துக்குள் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும் இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளன. பறக்கும் பீரங்கிகள் என்றழைக்கப்படும் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட்ட பிறகு ராணுவத்தின் பலம் மேலும் பலமடங்கும் அதிகரிக்கும்.

மேலும் இந்திய விமானப்படை, ராணுவத்துக்காக உள்நாட்டில் 156 ஹெலிகாப்டர்களை தயாரிக்க இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட உள்ளன. இவை சியாச்சின், கிழக்கு லடாக் பகுதிகளில் நிலை நிறுத்தப்படும் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.